ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2315/35 - 2023 ජනවාරි මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.01.19
2315/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1)(அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், என்னால் 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் காலத்துக்குக் காலம் திருத்தப்பட்ட, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, 2023, சனவரி மாதம் 19 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மேலும் திருத்தப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2022, சனவரி மாதம் 19.

1A - G 38627 — 361 (2023/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் “இல. 13. நீர்வழங்கல் அமைச்சர்” எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அத்தலைப்பு மற்றும் அத்தலைப்பின் கீழ் உள்ள I ஆம், II ஆம் மற்றும் III ஆம் நிரல்களுக்குப் பதிலாக பின்வரும் I ஆம், II ஆம் மற்றும் III ஆம் நிரல்களைப் பதிலீடு செய்வதன் மூலம்

**13. நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விடயத்துடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேய ரீதியிலும் பெற்றுக்கொடுத்தல்<br>3. வீண் விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. ஒவ்வொரு பிரசைக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>5. நீர்வழங்கல் சேவைகள், வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகள் பற்றித் தேடிப்பார்த்து அது பற்றிய புதிய திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்துதலும் பராமரித்தலும்<br>6. கிராமிய குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து நீர்பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற நீர்வழங்கல் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் | 1. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை<br>2. நீர் வளங்கள் சபை<br>3. தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம்<br>4. பெருந்தோட்டப் பிராந்தியத்திற் கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை<br>5. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்<br>6. சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம்<br>7. பெருந்தோட்டத் துறை சுயதொழில் சுழற்சி நிதியம் | • தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் (1974 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க)<br>• நீர் வளங்கள் சபைச் சட்டம் (1964 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க)<br>• பெருந்தோட்டப் பிராந்தியத்துக் கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் (2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)<br>• சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)<br>• வேறேதேனும் அமைச்சரொரு வரின் நோக்கெல்லையின் கீழ் குறிப்பாகக் கொண்டு வரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டவாக்கங்களும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 7. குடிநீரை விநியோகிக்கும்போது ஏற்படும் நீர் விரயத்தைத் தடுத்தல் | | |
| 8. சமூக நீர்வழங்கல் மற்றும் கருத்திட்டங்களைச் செயற்திறனுடனும் ஒழுங்கு முறைக்கமையவும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் | | |
| 9. கிராமப்புற மக்களுக்கு சிறந்த தரத்திலான குடிநீரினை வழங்குவதற்காக சமூக நீர்வழங்கல் திட்டத்தைப் பராமரித்தலும் மேம்படுத்தலும் | | |
| 10. கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கலை நிலையாக மேற்கொள்ளல் மற்றும் நீர்த்தேக்கங்கள், நீரேந்து பிரதேசங்கள் என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் நீரினைப் பாதுகாத்தலும். | | |
| 11. தேசிய நீர்ப்பாசனக் கட்டமைப்பினூடாகக் கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் நடைமுறையிலிருக்கும் நீர்வழங்கல் கருத்திட்டங்கள் சார்ந்த நீர் வழங்கல் திட்டங்களைத் துரிதப்படுத்துதல் | | |
| 12. அரச மற்றும் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளில் கடமை புரியும் காணிகள் அற்ற மக்களுக்கான வீட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் புதிய கிராமங்கள் மற்றும் நகரங்களை உருவாக்குதல் | | |
| 13. பெருந்தோட்டத் துறை மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதற்கான அடிப்படை வசதிகள், வாழ்வாதார உற்பத்தி மற்றும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் உள்ளடங்கிய ஏனைய வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |
| 14. கிராமிய பெருந்தோட்டத் துறைகளின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் | | |
| 15. பெருந்தோட்ட மக்கள் சமூக தலைமைத்துவம் மற்றும் சமூக பங்கேற்பு "மக்கள் சபை மற்றும் மக்களை அடிப்படையாகக் கொண்ட நிலையங்களை" தாபித்தல். | | |
| 16. பெருந்தோட்ட சமூகத்தின் பிள்ளைகளுக்கான ஆரம்பக் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *17.* II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய சகல விடயங்களுக்கான நடவடிக்கைகளும்<br>*18.* II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா நிறுவனங்களையும் கண்காணித்தல் | | |

(2) அவ்வறிவித்தலில் "இல. 20. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 36 இலிருந்து 40 வரையான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 41 மற்றும் 42 வரையான விடயங்களை முறையே 36 மற்றும் 37 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 18 இலிருந்து 21 வரையான விடயங்களை நீக்குவதன் மூலம்;

(ஈ) அதன் III ஆம் நிரலிலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன் மூலம்;

- பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம் (2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க)
- சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க)

EOG 01-0204

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.